உ

சிவமயம்



தங்கோடை - காரைநகர்

ஜெனன இடமாகவும்

நவாலி தெற்கு - மானிப்பாய்

வசிப்பிடமாகவும் கொண்ட

# ஸ்ரீமான்

# வேலுப்பிள்ளை செல்லத்துரை

அவர்களின்

# நினைவு மலர்

26-6-80

சிவஜோதி அச்சகம் கட்டுடை மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.



# திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை

தோற்றம்: 1910-9-27 மறைவு: 1980-5-28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# செல்வனே அடைக சாந்தி!

செந்தமிழின் சுவைதன்று சாஹிராக் கல்லூரியில்
செம்மைமிகு தலைமை ஆசிரியரென உலகம் போற்ற
அந்தமிலா ஆசானாய், ஒளிவிளக்காய்
அவனிபுகழ் விளையாட்டு வீரனாக எங்கள்
சிந்தை விட்டகலாத செம்மல் வீரன்
மாண்புமிகு செல்லத்துரையாம் அதிபர் செல்வன்
நொந்துள்ளம் நாம் வாடப் பிரிந்தான் அந்தோ
நொடிப் பொழுதில் நிலையில்லா உலகை விட்டே

ஆசானென் றழைப்பரோ மக்கள் எல்லாம்
பண்புடனே உரைபகர்வாய் நீயும் ஐயா
எண்டிசையும் புகழ் பரவும் ஏற்றம் மிக்க
இனிய பல நாடகங்கள் மேடை யேற்றி
மகாஜனக் கல்லூரி பரிசில் பல
போட்டிகளிற் பெறவே யன்று
தொண்டுபல புரிந்திட்டாய் உந்தன் கீர்த்தி
தொல்லுலகில் கூறிட யார் வல்லார் ஐயா!

திருவாளன் வேலுப்பிள்ளை செல்வி தெய்வானையின்
செய்தவத்தால் நாம் மகிழப் பிறந்த செல்வா
அருளாளன் பொருளாளன் ஆகி நின்றே
கல்விப் பொதுப் பணிக்கே நிதி வழங்க
பெரு வாழ்வு வாழ மாணவர்க்கு கலை பயின்று
ஊக்கமுடன் பலர் வாழ வைத்தாய் என்றும்
வருவோரை மகிழ்ந்தேற்பாய் வள்ளலானாய்
வள்ளுவனார் வழிநின்றாய் வாழி ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டப்பட்ட தாரியென்ற புகழ் மாருக்
குன்ருக நின்று செவி மடுப்போர் உள்ளம்
நாட்டங்கொள் சங்கீத வித்துவானும் திகழ்ந்தாய்
நல்மணியாய் வாய்த்த மனை மக்கள் நண்பர்
தேட்டங்கள் எனவந்த மாணவர்கள்
இரண்டொன்ருய்க் கதறியழ விண்ணேர் நாடு
கூட்டிலுள்ள கிளி வெளியே பறந்தாற் போல
கோமானே சென்ருயோ குறையென் கண்டாய்!

சிவனிடத்து மாருத பக்தி மார்க்கம்
ஆங்கிலத்தை கற்பிக்கும் சிறந்த ஆற்றல்
எவரிடத்துக் காண்போம் நாம் இனிமேல் ஐயா
எல்லோர்க்கும் நல்லவனுய் இருந்து வாழ்வின்
நலம் நலமாய் கிடைத்த பல செல்வமெல்லாம்
நானிலத்தில் யார்பெற்ருர் கூறுவாயே!
தவக்குன்றே தனக்குவமை இல்லா ஈசன்
தாளிணைக்காய் செல்வனே அடைக சாந்தி!



உ

சிவமயம்

# நினைவு அஞ்சல்

காலஞ் சென்ற எனது நண்பர் வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் தேகவியோகமானதைக் குறித்து நான் பெரிதும் துக்கம் அடைகிறேன். அவர் சுகயீனமாக இருந்தபோது அவரைச் சந்திக்க முடியாமல் போயிற்று. 1945 ம் ஆண்டு தொடக்கம் 1965 ம் ஆண்டு வரை எனக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மகாஜனக் கல்லூரியை வந்து சேர்ந்த நாள் தொடக்கம் கல்லூரியை நான் விடும் வரைக்கும் என்னிடத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த மதிப்பும் அன்பும் உடையவராய் அவர் இருந்தார். அவரும் யானும் கல்கத்தாப் பல்கலைக்கழகச் சோதனைகளுக்கு ஆயத்தம் செய்து சித்தி அடைந்தோம். அவர் எனக்கு கல்கத்தாவில் பெரிதும் உதவியாயிருந்தார். யானும் அவருக்கு மன உறுதியைக் கொடுப்பதில் உதவியாயிருந்தேன்.

அவர் ஒரு கலைஞர், சங்கீதப் பிரியர், நாடக ஆசிரியர். அவர் நகைச்சுவை வாய்ந்தவர். 1951 ம் ஆண்டு மகாஜனக் கல்லூரியில் ஓர் சிறந்த நாடகத்தை சில மாணவர்களுக்குப் பழக்கி நன்மதிப்பைப் பெற்றார். ரூபா 5000 வரையில் இதனால் கல்லூரிக்குச் சேர்ந்தது. 1960 ம் ஆண்டு கல்லூரி பொன்விழா கொண்டாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது சில ஆசிரியர்களையும் சில மாணவர்களையும் பழக்கி ஓர் நாடகத்தை நடாத்திப் புகழ் ஈட்டினார். கலையரசு சொர்ணலிங்கம் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தன் இசைப்பணியையும் நாடகம் நடாத்தும் ஆற்றலையும் விருத்தி செய்தார். திரு. செல்லத்துரையின் பாரியாரும் பிள்ளைகளும் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ இறைவன் அருள் புரிவாராக.

இங்ஙனம்
ஆசிரிய நண்பன்
செ. சின்னத்துரை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

வேதத்தின் வித்தாய் விண்ணவர்க்குந் தெய்வமாய்
தீதற்ற நெஞ்சத் திருவிளக்காய் — மாதவத்தின்
அருளாய் ஒளிர்கின்ற ஐயா விநாயகனே
புருவ நடுவில் திருத்தி என்றும் போற்றுவாம்.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்
தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மானிவனன்றே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிலையைத்
 திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
 குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
 அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
 செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
 சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
 லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

துய்யதோர் மறைகளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர் பாடல்

இனியேதெமக் குனருள் வருமோ வெனக்கருதி
ஏங்குதே நெஞ்சமையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
அனியாய மாய்இந்த வுடலைநா னென்றுவரு
மந்தகற் காளாகவோ
ஆடித்திரிந்துநான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போனதன்றே
கனியேனும் வறிய செங்காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரிபூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

## பட்டினத்தார் பாடல்

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்தமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

பிறவா திருக்க வரந்தர வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாணரடிக் கமலம்
மறவா திருமன மேயது காண்நன் மருந்துனக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எனது கணவர் | தந்தையார் | மாமனார் மரணச் சடங்கிலும், அந்தியேட்டி வைபவத்திலும், நேரில் ஆறுதல் கூறி தேறுதல் செய்தவர்கட்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் சகல விதங்களிலும் எமக்கு ஆதரவு கொடுத்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இங்ஙனம்

திருமதி செ. மகேஸ்வரன் மணி
செ. முருகானந்தன்
செ. நித்தியானந்தன்
ச. சியாமளா
பா. பத்மினி
சு. சந்திரசேகரம்
செ. பாலச்சந்திரன்
நி. சுலோசனாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org